# தமிழ் வளர்ச்சியில் சமயங்களின் பங்கு

**மா. சுஜாதா பி லிட்., பி. எட்., எம் ஏ., எம் பில்**

**தமிழாசிரியர்,**

**கொ. சி. சங்கரலிங்க நாடார் மேல்நிலைப்பள்ளி, சென்னை - 21.**

**27**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழனுக்கு என ஓர் தனிப்பண்பு உண்டு. யார் ? எவர் ? என்ன? என்று அறியாது, அவர்கள் கூறும் கருத்துக்களை மட்டும் கவனித்தல் . சிறந்த கருத்துக்களை ஏற்பது.

**" எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"** வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப அமைந்துள்ளது. (அதி;43, குறள் 423) என்ற சிந்தனை வளமுடையவர்கள் தமிழர்கள். தமிழகத்திற்கு உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்வேறு சமயங்கள் வந்தன. வைதீக சமயம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் வடநாட்டிலிருந்தும், கிறிஸ்துவம் இஸ்லாமியம் முதலிய சமயங்கள் வெளிநாட்டில் இருந்தும் வந்தன. இச்சமயங்களை பாராது; யார் ? கொண்டு வந்தார்கள். என்னென்ன? வாழ்வியல் நெறிமுறைகள் கூறுகிறார்கள். என்ற கருத்தை செலுத்தினான். தமிழன்; இச் சமயங்கள் அனைத்துமே! தமிழின் வாயிலாகவே தம் கருத்துக்களை வெளிப்படுத்தினர். இதன் வழியாக சமயமும், தமிழும், "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்ததே அறிகிறோம்." இதனையே "பாரதி " , " சமயம் தோறும் நின்ற தையல்", என்று புகழாரம் சூட்டுகிறார்.

பிற சமயங்கள் தமிழகம் வந்ததால், தமிழில் பல தரப்பட்ட தத்துவக் கருத்துக்கள்; அழுத்தமாக: படியத் தொடங்கியது. சிந்தனை, சொல், செயலில் பல மாற்றங்கள் தமிழ் மண்ணிலும், தமிழர் ; வாழ்விலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. என்றால்; அது மிகையன்று. இது இலக்கிய வரலாறு கூறும் சான்றாகும்.

காதல், வீரம், கொடை, வெற்றி... போற்றி வந்த தமிழர்கள் வாழ்விலும் அறவழிப்பட்ட நீதிகளை உடைய பாடல்களை இயற்றி பெரும் மாற்றத்தை சமண, பௌத்த சமயங்களையே சாரும். நீதி நூல்கள் எழுதிக் குறித்து தமிழை செழுமைப்படுத்தியவர்கள். காப்பியங்கள், தத்துவ சிறப்புகள், கொள்கைகள் , கோட்பாடுகளை எளிதாக மக்களுக்கு உணர்ந்து உணர்த்த முடிந்தது. சான்றாக இரட்டைக் காப்பிகளை கூறலாம் சான்றாக இரட்டைக் காப்பியங்களைக் கூறலாம். தமிழகம் அந்த இஸ்லாம் தன் மார்க்க தத்துவங்களை தமிழில் கூறினார்கள். *ஒழுக்கவியல் * அடிப்படையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் இலக்கியங்கள் படைக்கப்பட்டது. புலவர் நாயகம், சேகனாப் புலவர். ஒருவர் மட்டுமே நான்கு காப்பியங்களை உருவாக்கியுள்ளார் . தமிழர் சமூகத்திற்கு இது ஒரு சாதனை. நமக்கெல்லாம் பெருமையல்லவா? புதுவித இலக்கிய வடிவங்கள் நமக்கு இதன் மூலம் கிடைத்தது. சான்றாக நொண்டி நாடகம், திருமண வாழ்த்து, அரபு தமிழ் என தமிழை சிறப்பித்தன. அன்றோ!

கிறிஸ்தவ சமயம் சார்ந்த வெளிநாட்டு தமிழ் அறிஞர்கள் மேனாட்டு வழியில் தமிழ் வளர்ச்சிக்கு

வழி வகுத்தனர். திருவாசகம், திருக்குறள், திருமந்திரம், திருவருட்பா …….. முதலில் இலக்கியங்கள் ஆங்கில மொழிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மொழியியல் துறை நவீன போக்கில் தடம் மாறியது. *கால்டுவெல் * "ஒப்பிட்டாய்வு. " வீரமாமுனிவரின் சதுர அகராதி அகராதி கலை காலத்துக்கு ஏற்ற வடிவில் உருப்பட்டதை காண்கிறோம் *எழுத்துச் சீர்திருத்தம்* செயல் வடிவில், மாற்றம் பெற்றது. அல்லவா! இன்றைக்கு நினைத்தாலும் பெருமையன்றோ!

அயல்நாட்டு தமிழர்கள். தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் நாகரிகம், ஆன்மீகம் சைவ, வைணவ, பக்தி இலக்கியங்களான திருப்பாவை, திருவெம்பாவை, தேவாரம், திருவாசகம் திருமந்திரம் திருவருட்பா என்ற எல்லா காலங்களிலும் அமைத்து பாடி வருகிறார்கள் நாம் அதனை எல்லாம் அன்றாடம் பயன்படுத்த மறந்தாலும் கூட மேலை நாட்டுத் தமிழர்கள் இதனை நித்தம் நித்தம் தம் காலை மாலை என இரு வேலையும் ஓதுபவர்களாகவும் இன்றைக்கும் அதனை கடைப்பிடித்து வருகிறார்கள். இது அயல்நாட்டு தமிழர்கள் கடைபிடித்து வருவது நமக்கெல்லாம் பெருமையல்லவா! இன்றைய நவீன காலத்தில் கூட நம்முடைய பண்பாடுகளை மறக்காது மேலைநாட்டு தமிழர்கள் கடைபிடித்து வருவது நம் தமிழர்களாகிய நமக்கு பெருமை அன்றோ! நாமும் கூட , *தமிழர்கள்* என்பதை மறவாமல் மனிதநேயத்தோடு, நம்முடைய வாழ்வில் , வாழ்வியல் விழும்பியங்கள், அறம் சார்ந்த வாழ்க்கையும், *இயற்கையோடு இணைந்த ஒரு வாழ்வும் வாழ, ஒரு உறுதி ஏற்போமாக? *

**ஆய்வு நோக்கம்:**

"உலகில் பிறந்த எந்த உயிர்களும் இறப்பது உறுதி. எப்போதாயினும் கூற்றுவன் வருவான் இறப்பு என்பது உறங்குவதை ஒக்கும் எனவும், பிறப்பு என்பது உறங்கி விழிப்பதைப் போன்றதெனவும் *வள்ளுவர் *கூறுகின்றார்".

***உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு***

***அருள் சேர்ந்த நெஞ்சினார் இல்லை இருள் சேர்ந்த இன்னா உலகம் புகழ்***.

ஆன்மா செய்த புண்ணிய பாவங்களுக்கு தக்கவாறு அருள் உலகக்கோ அல்லது இரு உலகக்கோ செல்கின்றது. பாம்பு தோளாகிய சட்டை விட்டுப் போவதை போலவும் பறவைகள் முட்டைகளை தோற்றினை விட்டு செல்வதைப் போலவும், கூடுவிட்டு கூடு பாய் அல்லது பரகாயப் பிரவேசிகள் உடம்பினை விட்டு வேறு சரீரத்தில் போவது போலவும் உயிர் தூர உடம்பினை விட்டு பிரிகின்றது. மேற் ; (1) - பக்-எண் (88)

**நூல்- *இந்துமத இணைப்பு விளக்கம்*** ,

அவரவர்களுடைய மதக் கொள்கைகளை அவரவர்கள் கடைபிடித்து ஒழுகலாம் ஆனால் பிற இந்து மதக் கிளைகளோடு பகைமை பாராட்டாதிருக்க வேண்டும். கிளை மதங்கள் அனைத்திற்கும் பொதுவாக அமைந்துள்ள ஒருமைப்
பாட்டினை மேற்கொண்டு ஒத்து வாழ வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாக கொள்ள வேண்டும். எம்மதமும் சம்மதம் என்பதற்கு ஏற்ப, *யாதும் ஊரே யாவரும் கேளிர்* என்ற கணியன் பூங்குன்றனார்

வாக்கிற்கு ஏற்ப, ஒற்றுமை உணர்வோடு உலக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வோமாக ! என்பதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும். நாமும் அதனை வழி மொழிவோமாகா!

**திறவுச்சொற்கள்** :

1. முன்னுரை
2. பௌத்தத்தின் தமிழ்ப்பணி
   (கி பி 2-14)
3. சமணத்தின் தமிழ்ப்பணி
   (கி பி 3-18)
4. சைவத்தின் தமிழ்ப்பணி
   (கி பி 3-18)
5. வைணவத்தின் தமிழ் பணி (கி பி 6-9)
6. கிறிஸ்துவத்தின் தமிழ்ப்பணி (கிபி 15 21)
7. இஸ்லாமியத்தின் தமிழ்ப்பணி (கிபி 16 21)
8. பிற்கால காப்பியங்கள் (கிபி 15 20)

**முன்னுரை**:

*அன்பே கடவுள்*, இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காது உறைகிறான். என்பர். நம் முன்னோர்கள். *அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே* என "திருமந்திரம் " கூறுகின்றது. மேற் ; (2) (பக்-2-3)

நூல்: *இந்து மத இணைப்பு விளக்கம்* ஆசிரியர்; மகா வித்துவான் கே. ஆறுமுகநாவலர்

இந்து மதம் என்பதற்கு *சனாதன தர்மம் * என்று வேறு பெயர் கூறுவர். இதன் பொருள் "அழிவில்லா அறன்' ஆகும்.

மதத்தை சமயம் எனவும் தத்துவம் என்றும் கூறுவார்கள். சமயம் என்பதற்கு" சமை " என்பது ஒரு பகுதி ஆயிற்று. உடம்பை பேணுவதற்கு உணவு பொருட்களை சமைப்பது போல , இறைவனை அடைய சாதனங்களை சமைப்பது (அல்லது) பக்குவப்படுத்துவது என்பது இதன் பொருளாகும். சமயம் கண்களால் காணப்படும் உலகத்தையும், அனுமானத்தால் அறியும், ஆன்மா வினையும் , இறைவனையும், இனிது காட்டும் "ஞான ஒளி", "ஒழுக்க பீடம்", "கற்பக மரம் " போன்றது ஆகும்.

2. பௌத்தத்தின் தமிழ்ப்பணி:

காலம் கி மு ஐந்தாம் நூற்றாண்டு தோற்றுவித்தவர் கௌதம புத்தர். போதனை அறக்கருத்துக்கள் கூறுதல். "ஆசையே துன்பத்திற்கு காரணம் பிற உயிர்களைக் கொல்லல் பாவம் பிறர் நலம் பேணல் வேண்டும். "என்ற கருத்துக்கள் நாடெங்கும் பரவத்தொடங்கியது.

பின்பற்றியவர் கிமு மூன்றாம் நூற்றாண்டு மகா அசோகர் மூலம் பௌத்தம் நாடெங்கும் பரவத் தொடங்கியதை அறிகிறோம். கலிங்கப் போரில் வெற்றி வாகை சூடிய போதிலும் மகா அசோகர்

போரில் ஏற்பட்ட அழிவுகளால் மனம் வருந்தி புத்த சமயத்தை உறுதியாக பின்பற்றத் தொடங்கினார் போதிதர்மர் சீனம் சென்று, புத்த சமயத்தை வளர்த்தார் வடக்கிலிருந்து தென்னகம் பரவிய பௌத்தம் தமிழகம் வழியாக நீளத்திற்கும் சென்று பரவியது சங்கமித்திரர், வச்சிரபோதி, அனுகுதா இவர்களில் முக்கியமானவர்கள் ஆவார்.

மொழி பாலி மொழி கல்வித்துண்டு நாளந்தா பல்கலைக்கழகம் உலகப் புகழ்பெற்ற தர்மபாலர் திண்ணகர் முதலியார் இதற்கு முக்கிய காரணமாக சான்று; சீனப் பயணி "யுவான் சுவாங் " தன்னுடைய பயண குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். இப் பல்கலைக்கழகத்திற்கு உலகெங்கிலும் இருந்து பல மக்கள் கல்வி அறிவு பெற்றதை பெருமையாக கூறுகிறார்.

பௌத்த பக்தி இலக்கியங்கள் இலக்கணம் உரை நூல்கள் எனப் பகுக்கலாம்.

மணிமேகலை, குண்டலகேசி, விம்பி சாரக்கதை, அபிதர்ம வதாரம், திருப்பதிகம் சித்தாந்த தொகை என்ற நோக்கில் வகைமைப்படுத்தலாம்.

மணிமேகலை கிபி 2ஆம் நூற்றாண்டு:

ஆசிரியர் கூலவாணிகள் சீத்தலை சாத்தனார்.

காலம் கிபி 2 , அடிகள் 4286 காதைகள் 30 பா வகை நிலைமண்டலி ஆசிரியப்பா சமயம்; பௌத்தம்.

வேறு பெயர்கள்; 1.மணிமேகலை துறவு,

2.முதல் சமயக் காப்பியம் 3.அறக் காப்பியம் புரட்சி காப்பியம்,4.கதை களஞ்சிய காப்பியம், 5.சமய கலைச்சொல் ஆக்க காப்பியம் ,(உ வே சா ) 6.பசிப்பிணி மருத்துவ காப்பியம் …….. பல்வேறு வகைப்பட்ட பெயர்கள் மணிமேகலைக்கு உண்டு. என்பதை அறிகிறோம்.

**பெயர்க் காரணங்கள்**:

1. கணிகையர் குலத்து மணிமேகலை இளமை துறவு பூண்டதை கூறுவதால்,
2. முதன் முதலில் பௌத்த சமயக் கொள்கைகளை வலுவாக எடுத்துக் கூறி வற்புறுத்துவதால்.
3. இக்காலத்திற்கும் ஏற்ற அறங்களை கூறுவதால்
4. பரத்தையின் மகளை அறத்துறவையாக்கியதால்
5. கிளைக் கதைகளை மிகுதியாக கூறுவதால்
6. பௌத்த சமயத்திற்குரிய வட பாலி மொழி கலைச்சொற்களை இயன்ற வரையிலும் தமிழாக்கம் செய்யும் முயற்சி காணப்படுவதால்
7. அமுது சுரபி மூலம் அனைவருக்கும் பசிப்பினியையும் மணிமேகலை மாற்றிக் காட்டியதால்

குண்டலகேசி;

ஆசிரியர் நாதகுத்தனார் பா வகை விருத்தப்பா காலம் கிபி 8 பாடல்கள் கிடைத்தவை- 19

**சமயம் பௌத்த காப்பியம் பெயர் காரணம்** ;

போது கலைந்த கூந்தல் மீண்டும் மீண்டும் வளர்ந்து சுருள் சுருளாக தொடங்கியதால் "சுருள் முடியினாள் " எனப் பொருள் படும். யாக்கை நிலையாமை பற்றி குண்டலகேசி மிக நுட்பமாக சிந்தனை செய்யும் அளவிற்கு கூறுகிறது.

**சான்று;**

"நாளும் நாம் சாகின்றோமால் நமக்கு நாம் அழாதது என்னோ? " மேற் - (3) பக்-எண்; (214-215) இளங்போதியார் என்பவர் நற்றிணையில் 72 ஆம் பாடல் "பேணுப பேணார் பெரியார்" மேற்; (4) பக்-எண்; (268) என்னும் பாடலை எழுதியுள்ளார் இதன் மூலம் இவர் பௌத்த சமயத்தவர் என்று இனம் காண முடிகிறது.

சமணம் ( கிபி 2- 16) ;

கிபிமூன்றாம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரிய மன்னர் வட இந்தியாவில் சமண மதத்தை தோற்றுவித்தார் பத்திரபாகு என்ற முனிவர் மூலம் தமிழகம் பருவத் தொடங்கியது. இதன் மூலம் தமிழர்கள் அரசியல் செல்வாக்கு பெற்றார்கள். தமிழ் நூல்கள் செழுமையும், வளமையும் பெற்றதை நாம் காண்கிறோம்.

சமணர் தமிழ் நூல்களின் பங்களிப்பு:

*சமண பக்தி இலக்கியங்கள் *இலக்கண நூல்கள் நிகண்டுகள் *உரையாசிரியர்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் *பிற நூல்கள்,* சைன இராமாயணம் புராணங்கள் பெருங்காப்பியங்கள், சிறு காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், சித்தாந்த, நூல்கள் உரைநடை நூல்கள் என ஏழு வகைமைகளாக பிரிக்கலாம்.

மல்லி நாதர் புராணம் சாந்தி புராணம் மா புராணம் மேரு மந்திர புராணம் என புராணங்கள்உள. 14ஆம் நூற்றாண்டு வாமனமுனிவர் மேரு மந்திர புராணத்தை இயற்றினார்.

சமணக் கொள்கைகள்:

*நன்மை, தீமைகளுக்கு ஏற்ப பிறவிகள் அமையும்.

* பெண்களுக்கு வீடு பேறு இல்லை என்பன சமணக் கொள்கைகள்… .

" ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக" மேற்;(5) பக்- எண்; ( 270)

என்பது வேறு மந்திர புராண பாடலுள் ஒன்றாகும்.

ஐஞ்சிறு காப்பியங்கள் (கிபி-16) ;

நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம்.

சிற்றிலக்கியங்கள்;

(கிபி: 815)

அந்தாதே கலம்பகம் பிள்ளைத்தமிழ் பாவை நூல்கள் ஆகிவைகள் சமணர் தந்த சிற்றிலக்கிய வகைகள் ஆகும். அல்லது பாவைப்பாட்டு கிபி 8 திருநீற்று அந்தாதி கிபி 14 திருக்கலம்பகம் கிபி 15 ஆதிநாதர் பிள்ளைத்தமிழ் கிபி 15 ஆதிநாதர் என்னும் தீர்த்தங்கரரை பற்றியது. காப்பு செங்கீரை முதலான பத்து பருவங்களைக் கொண்டது சந்த நலம் மிக்கது.

சித்தாந்த நூல்; (கிபி 14)

நூல் சிவசம்போதனை சமணஸ்தான ந ூல் ஆசிரியர் தேவேந்திர மாமுனிவர் பாடல் 550 பாக்கள்.

**நூற்பா சான்று**:

* அறிவு எனப்படுவது துன்பம் துடைத்தல்* மேற்-(6), பக்-எண்: (271)

உரைநடை நூல்கள் கிபி 12 ஸ்ரீ புராணம் உத்தர புராணம் முதலியவை உரைநடையில் உள்ள நூல்கள் ஆகும்.

மணிப்ரவாளநடையும் பேச்சு நடையுமாக இந் நூல்கள் அமைந்துள்ளது. சமண சமயத்தில் 24 தீர்த்தங்கரர்களையும் பற்றி கூறுகிறது. சமணர்கள் இந்த நூல்களை தினமும் படிக்கிறார்கள். என்பதையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

**சமண சங்க இலக்கியங்கள் சில**;

*சங்க இலக்கியத்தில், "நிகண்டன் கலைக்கோட்டு தண்டனார்", என்னும் சமணப் புலவர் நற்றிணையில் 383 ஆம் பாடல் பாடியுள்ளார்.

* லோச்சனார் என்னும் புலவர் 35 சங்கப் பாக்களை பாடியுள்ளார். சுலோச்சனம் மயிரை வேரோடு பிடுங்குதல் சமணத்துறவியாகும் போது உழச்சனம் செய்வது சமண நெறிமுறைகளில் ஒன்றாக விளங்குகிறது.

* சங்க நூல்களுள் எட்டுத்தொகை நூல்களான அகநானூற்றில் 59 ஆம் பாடலிலும் புறநானூற்றில்175 ஆம் பாடலிலும், சமணக் குறிப்புகள் காணப்படுகின்றன. என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

* சமண நீதி நூல்கள்:

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள், நாலடியார் , சிறுபஞ்சமூலம், பழமொழி, ஏலாதி, சிலர் திரிகடுகம் இனியவியின் 40 தினை மாலை 150 நான்மணிக்கடிகை ஆகிய நூல்களும் சமணருடையவை என்பர்.

இலக்கண நூல்கள் அபிநயம் யாப்பெருங்கலும் யாப்பருங்கலக் காரிகை, வச்சிணந்தி மாலை, நேமி நாதம், நன்னூல், நம்பியகப் பொருள் என்னும் புகழ் பெற்ற இலக்கண நூல்களை சமணர் படைப்புகளாகவே காண்கிறோம். நிகண்டுகள் செயல் வடிவில் ஆனது தொல்காப்பிய உரியியல் மரபியல்ர்களின் வளர்ச்சி பெற்ற வடிவம் நிகண்டு எனலாம் நிகண்டு பன்னிரண்டு தொகுதிகளை கொண்டது மொழியில் காணப்படும் அரிய சொற்களையும் வரையறுத்து பொருள் கூறுவது நிகண்டு. இதில் உள்ள 11 ஆம் தொகுதியான சொல் விளக்கப் பகுதியில் உரைநடை வடிவமே! அகராதி எனப்படும். திவாகர நிகண்டு திங்களன் நிகண்டு உரிச்சொல் நிகண்டு சூடாமணி நிகண்டு முதலென பல நிகழ்வுகள் சமன் அல்லது படைப்புகள் ஆகும்.

சமண உரையாசிரியர்கள் :நச்சினார்க்கினியர்-தொல் எழுத்ததிகாரம், இளம்பூரணர்- தொல் பொருள் ,அடியார்க்கு நல்லார்- சிலம்பு ,மயிலை நாதர் -நன்னூலுக்கு முதல் உரை ,குணசாகரர்- யாப்பெருங்கலக் காரிகை காளிங்கர்- திருக்குறள் வாமன முனிவர்- நீலகேசி பதுமனார் முதலியார் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களாக கருதப்படுகிறார்கள். சைவம்( கி பி 18)

" வேத நெறி தலை தொங்க மிகு சைவத்துறை விளங்க அவதரித்தவர் "ஞானசம்பந்தர் என்பார் .*சேக்கிழார் சுவாமிகள்* மேற்(6), பக்-எண்; (7) நூல் *சைவ சமயம் (ஓர் அறிமுகம்)* ஆசிரியர்-

டாக்டர்கள். அருணாசலம், சைவம் என்பதை விளக்கும் *திருமூலர்* சைவம் சிவனுடன் சம்பந்தமாவது என்பர். "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே உலகுக் கோருவனாய் நின்றாய் நீயே 6628 ஆம் பாடல் என "அப்பர் " சுவாமிகள் பாடியுள்ளார். மேற்-(8), பக்- எண்;(8) நூல் ச.சிவனேனும் ஓசை அல்லாது அறையோ உலகில் திருநின்ற செம்மையுளதே* மேற்-(9) பாடல் எண் - (4230) என்ற பாடல் பாடுகிறார்.

"ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலான் " என்று பாடிய மாணிக்கவாசகரே மேற்-(10) , பக்; எண்(13) "சிவனே", சிவனே" என ஒலமிடுகிறார். சிவ நாமத்தை ஒலிக்காதவர்கள் நல்ல விதியற்றவர்களே! என்ற உரைக்கிறார் *திருமூலர்.* மேற்-(11),

பக்- எண்(13) இதன் மூலம் "நமச்சிவாயா' என்னும் நாம மந்திரமும் "சிவாய நம " என்னும் மந்திரமும் இருந்தன என்பதை அறிகிறோம்.

"ஆங்கிலம் வணிகத்தின் மொழி;

லத்தின் சட்டத்தின் மொழி;

தமிழ் பக்தியின் மொழி என்று கூறுவதும் பொருந்தும். " தனிநாயக அடிகளார் உடைய வரிகள் இதனை நமக்கு தெளிவு படுத்துகின்றது. மேற்-(12), பக்-எண்-(14)

ஆலயப் பணியே ஆண்டவன் பணி என்னும் சிந்தனை வேறொன்றியது கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் . (திரு) நீறில்லாத நெற்றி பால் என்னும் எண்ணம் மக்கள் மனதில் ஊற்றப்பட்டது. நாடெங்கும் கோயில்கள் கட்டப்பட்டது. இலக்கிய நூல்கள் பல எழுதப்பட்டது. மேற்-(13)

பக்- எண் -(14) சைவம் சார்ந்ததாகவே இருந்தது. சைவம் அடங்கும் இதில் பங்கேற்றது.சைவ திருமுறை நூல்கள் பன்னிரு திருமுறைகள் சைவ சாத்திர நூல்கள் 14 நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் என்பர். சைவ பக்தி இலக்கிய நூல்கள், கலம்பகம், பிள்ளைத்தமிழ் உலா, அந்தாதி , இரட்டை மணிமாலை.

சைவ மதங்களின் தமிழ் பணி சாத்திர நூல்கள் பக்தி இலக்கியங்கள் மட்டுமின்றி சைவ மதங்களும் தமிழை காப்பதிலும், தமிழை வளர்ப்பதிலும் பெருந்துணை புரிந்துள்ளது. என்பதை நாம் அறிகிறோம்.

வைணவமும் தமிழும் (கிபி 6-9) ;

திருமாலை சமய கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் எனப்படும் வைணவ சமயத்தை இறையடியார்கள் பன்னிரு ஆழ்வார்கள் எனப்படுவர். திருமாலின் அருளில் அன்பில் ஆழ்ந்த தம்மை மறந்தவர்களே ஆழ்வார்கள். ஆவர் . மேற்-(14) பக்-(314) திருமால் வழிபாடு ஆகும். தொல்காப்பியம் சங்க இலக்கியம் காப்பியம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கம்பராமாயணம் வில்லிபாரதம் என பல நூல்கள் தமிழ் மொழிக்காகவே பாடுபட்டுள்ளது. என்பதை அறிந்து நாம் வியக்காமல் இருக்க முடியுமா?

கிறிஸ்தவம் (கிபி 15 -21)

" கலம் தரு திருவின் பொருட்டு கிபி 15 ஆம் மேற்-(15) , பக்- எண்(327)

நூற்றாண்டில் டேனிஷ்காரர் டினிஸ்காரர் பிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயர் முதலாம் ஐரோப்பியருக்கு இந்தியாவிற்குள் இணைந்தனர்.வணிகத்தின் பொருட்டு வந்தவர்கள் சமயம் பரப்புதல் தமிழ் கற்பது போன்ற பல ....படைப்புகள் படைத்தார் கள் . மேலைநாட்டு கிறிஸ்தவர்களின் தமிழ்ப்பணி வீரமாமுனிவர் ரேனியஸ் எல்லீஸ் லாசரஸ் ஜி யு போப் கால்டுவெல் திருச்சதகம் தனிநாயக அடிகள் சதாசிவப்பிள்ளை ஜெ, ஏ. அர்னால்டு என்று அழைக்கப்படுகிறார். இவர்களுடையது பணிகள் அளப்பரியது .சமயப்பற்று, தாய் மொழிப் பற்றும், தமிழ் மொழி பற்றும், நாட்டுப்பற்று மிக்கவர்களாக. இவர்கள் இருந்தார்கள் . என்பதை அறிந்து நாம் இவர்களைப் போலவே , இவர்களுடைய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி வழி நடப்போம். என்று உறுதி ஏற்போம். ஆக!

* ஈழநாட்டு கிறிஸ்துவர் தமிழகத்து கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவர் அல்லாத தமிழ்ப்பணி கிறிஸ்தவ தமிழ் பணியில் விளைந்த தமிழ் மறுமலர்ச்சி அச்சு இயந்திரம் தாள் மை முதலான அறிவி வளர்ச்சிகளால் தமிழ் மொழியாற்றில் ஏற அடிப்படையாக இருந்தார்கள் கிறிஸ்தவர்கள் இது மட்டுமின்றி எடுத்து சிறு திருத்தம் கட்டுரைகள் இதழ்கள் அகராதிகள் திறனாய்வு போக்குகள் போன்று தீபமாக இவர்களுடைய படைப்புகள் அனைத்தும் சுடர் விட்டது. கிறிஸ்தவர்களுடைய தமிழ்ப்பணியை நாம் வியக்காமல் இருக்க முடியாது. நம் தமிழ் சமூகத்திற்கு இவர்களின் பணி அளப்பரியது. எண்ணில் அடங்காத .......நன்மைகளை இவர்கள் செய்து இருக்கிறார். படைத்துள்ளார்கள்.

புதின இலக்கியத்தின் தந்தை இன்று அனைவராலும் போற்றப்படுபவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. தமிழில் முதன் முதலில் 1879 ஆம் ஆண்டு பிரதாப முதலியார் சரித்திரம் எனும் புதினத்தை படைத்து வெற்றி கண்டவர்." புதினா இலக்கியத்தின் தந்தை" என்று அனைவராலும் போற்றப்பட்டவர். நகைச்சுவையையும் நீதிச்சுவையும், பெண் முன்னேற்றம் போற்றுவது. இவருடைய நூல்கள். இவர் சுகுணசுந்தரி 1887 ஆம் ஆண்டு புதனத்தை எழுதியுள்ளார்.

நீதிப்பணி;

இப்பதாவது வயதிலேயே முதல் இந்திய நீதிபதியானவர் இவரது நேர்மையின் காரணமாக "ஏழைக்கு இரங்கிடும் வேதநாயகர் எப்போது வருவாரோ கச்சேரிக்கு எப்போது வருவாரோ " என்னும் நாட்டுப் பாடலை உருவானது .

மேற்-(16), பக்-(337) .

1860-இல்* நீதி நூல்* என்னும் நூலை எழுதியவர்.

."பரனைப் பாடிய வாயால் நரனைப் பாடேன் " என்ற கொள்கையை கொண்டிருந்த கோபாலகிருஷ்ண பாரதியார் வேதநாயகரை நீயே புருஷ மேறு என பாராட்டினார்.

மேற்-(17), பக்-(337).

இஸ்லாமியத்தின் தமிழ்ப்பணி (கிபி 16 -21)

முகமது நபி அவர்களால் கிபி ஏழாம் நூற்றாண்டில் அரபு நாட்டில் இஸ்லாமிய சமயம் தொடங்கப்பட்டது இஸ்லாமியர்களை இலக்கியங்களை சோனகர் துர்க்கர் என குறிப்பிடுகின்றனர்

கிபி 14ஆம் நூற்றாண்டில் மாலிக் போரின் படையெடுப்பு தமிழகத்தில் மேல் நிகழ்ந்தது அதன் பிறகு அரை நூற்றாண்டுகள் முகலாய ஆட்சியை தமிழகத்தில் வேறு ஒன்றியது இஸ்லாமியர்கள் காப்பியங்கள் சிற்றிலக்கியங்கள் பாடல்கள் சமய இலக்கியங்கள் சூபி மெய்ஞான இலக்கியங்கள் நாட்டுப்புற பாடல்கள் பழமொழிகள் ஒப்பிலக்கியம் என்று மறு வரிசைப்படுத்தி கூறிக் கொண்டே செல்லலாம் சீறாப்புராணம் ஆசிரியர் குமரப் புலவர் காலம் கிபி 17ஆம் நூற்றாண்டு பாடல்கள் 1027 பா வகை விருத்தப்பா படலங்கள் 92 காண்டங்கள் மூன்று என்று கூறலாம் பாரினில் பெரும் புனல் பறந்த செல்வம் இருந்தனர் 178 1835 ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகில் உள்ள குணங்குடியில் பிறந்தார் மெய்ஞான பாடல்களை பாடும் குவிப்புலவர் இவருடைய பாடல்கள் பட்டினத்தார், வள்ளலார், தாயுமானவர் பாடல்களுக்கு ஒப்பாக இலங்குகிறது. இவரது படைப்புகள் சில நிராமயக்கண்ணி, பராபரக்கண்ணி, ரகுமான் கண்ணி, மனோன்மணிய கண்ணி முதலான பல பாடல்களையும் பாடியுள்ளார்.

**முடிவுரை**

தமிழர்கள் சமயம், மொழி, சமுதாயம், என்ற அனைத்து நிலைகளிலும் அது என்ன சங்கங்கள் அமைத்து. சமய ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கு இலக்கியங்கள் அனைத்தும் நம்மை நல்வழிப்படுத்துகின்றன இதன் மூலம் நல்ல எண்ணங்களையும் நல்லொழுக்கம் அறம் சார்ந்த வாழ்வு இயற்கையோடு இணைந்து வாழ்வு ஆன நம்மை வழி நடத்துகின்றது தமிழ் வளர்ச்சியில் சமயங்களுடைய பங்கு என்ற இந்த கட்டுரையின் மூலம் நாம் ஒவ்வொரு மதங்களையும் பற்றியும் சுருக்கமாக அறிந்தோம். மதங்கள் எல்லாம் நம்மை நல்வழிப்படுத்தி, ஒற்றுமையை , வலியுறுத்துகின்றது.

வாழ்க பாரதம்!

வாழ்க பாரத மணித் திருநாடு!!

ஒரே நாடு! ஒரே தேசம்!

ஒரே உலகம் அன்றோ!!!

**மேற்கோள் நூல்கள் & துணை நூற் பட்டியல்**;

1. நூல் பெயர்;
   "இந்துமத இணைப்பு விளக்கம்"
   ஆசிரியர் *மகாவித்துவான் ஆறுமுக நாவலர்*
   பதிப்பகத்தார்: முல்லை நிலையம்,
   9 பாரதி நகர் முதல் தெரு, தி. நகர், சென்னை 600017 கைபேசி எண் - 04428342249.
   பக்க எண்; 2-3 ,
   பக்க எண்; 13 ஆண்டு; முதற்பதிப்பு- 2022.
2. நூல் பெயர் ;*வகைமை இலக்கிய வரலாறு (செம்மை மற்றும் விரிவுப் பதிப்பு) *
   ஆசிரியர் பெயர்:
   பேராசிரியர் முனைவர் பாக்கியமேரி எம்ஏ பிஎட் எம்ஃபில் பிஎச்டி இணைப் பேராசிரியர் உயர் தமிழில் துறை

மாநிலக்கல்லூரி சென்னை- 600 005.
பக்க எண்; 266
பக்க எண்; 205
பக்க எண்; 214-215
பக்க எண்; 270-271
பக்க எண்;14, 314
பக்க எண்; 327.
பூவேந்தன் பதிப்பகம் 10/2 , ஸ்ரீனிவாசா சாலை,
மயிலாப்பூர், சென்னை 600004,
கை பேசி
முதற்படிப்பு 2014 ஆறாம் பதிப்பு 2022 வரை.

3. நூல் பெயர் ;
"சமண பௌத்த கிறிஸ்தவ இஸ்லாமிய இலக்கியங்கள்"
தொகுப்பாசிரியர் மணவை முஸ்தபா எம்.ஏ
பக்க எண் ; 1
பக்க எண் ; v
பக்க எண் ; 4
பக்க எண் ; 6
பக்க எண் ; VIII
பதிப்பகம்;
மீரா பப்ளிகேஷன்
103, அண்ணாநகர் சென்னை:600 040 .
முதல் பதிப்பு ஆகஸ்ட் 1997.

4. நூல் பெயர்;
" சைவ சமயம்( ஓர் அறிமுகம்) "
பதிப்பகம்;
முல்லை நிலையம்,
9, பாரதிநகர் முதல் தெரு,
தி. நகர்,
சென்னை - 600 017.
பக்க எண்; 13-14
முதல் பதிப்பு 2017.